**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - *641 003*

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: *94890 56730*

தொலைபேசி: *0422 - 6611302*
நிகரி: *0422 - 2431821*
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,　　　　　　　　　　　　　　　　　　　　　　தேதி:*17.09.2026*
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக**
**முதலாமாண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் ஆரம்பம்**

இந்த கல்வியாண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கும் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மைப் பிரிவிற்கும், ஒரே இணையதளம் மூலம் இளமறிவியல் மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 14 இளமறிவியல் பாடப்பிரிவுகளுக்கும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் 3 இளமறிவியல் வேளாண்பாடப்பிரிவுகளுக்கும் இணைய விண்ணப்பத்தின் வழியாக மாணவர் சேர்க்கை நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2,516 இடங்களுக்கும், அதன் இணைப்புக் கல்லூரிகளில் அரசு இடஒதுக்கீட்டின் கீழ் 3,051 இடங்களுக்கும் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மைப் பிரிவில் 340 இடங்களுக்கும் மாணவர் சேர்க்கை நடைபெற்றது.

09.07.2026 முதல் 15.09.2026 வரை நடைபெற்ற பல்வேறு கலந்தாய்வுகளுக்குப் பிறகு (நேற்று) 16.09.2026 அன்று கல்லூரி திறக்கப்பட்டது.

இதனையொட்டி பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் முதலாமாண்டு மாணவ மாணவிகளை வரவேற்கும் பொருட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டது, இந்நிகழ்வில் சிறப்பரையாற்றிய பல்கலைக்கழக பொறுப்பு துணைவேந்தர் முனைவர்.மு.இரவீந்திரன் அவர்கள் மாணவர்களை வரவேற்று வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் மாணவர்கள் வேளாண்மையில் கொண்டிருக்க வேண்டிய ஈடுபாடுகள் குறித்து அறிவுறுத்தினார். பள்ளிப் படிப்பை முடித்து வேளாண்மையை தெரிவு செய்தமைக்கு மாணவர்களுக்கும் அவர்தம் பெற்றோருக்கும் தன் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக முதன்மையர் வேளாண்மை (பொ), முதன்மையர் (பட்டமேற்படிப்பு), முதன்மையர் (வேளாண் பொறியியல்), முதன்மையர் (தோட்டக்கலை) ஆகியோருடன் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் துறைத்தலைவர்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்